இனிது ரகசியம் அல்ல!

பக்கங்கள்: 12

# காலைக்கதிர்

Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 29 சனிக்கிழமை 11.04.2020 கதிர் 157

நாட்டில் பல தரப்புகள் குறித்தும் எல்லோரும் பேசுகின்றோம். உழைக்கும் வர்க்கம் என்கிறோம், மாணவர் சமூகம் என்கின்றோம், இளைஞர் பட்டாளம் என்கின்றோம். வயோதிபர்கள் என்கின்றோம். இவர்கள் பக்கம் 02

# உள்ளூராட்சி சபைகள் தம் நிதியில் இருந்து நிவாரணப் பணிகளை முன்னெடுக்க முடியாது

## வடக்கு மாகாண ஆளுநர் தீர்மானம்

யாழ்ப்பாணம் ,ஏப்ரல்.11

**வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட சகல அமைச்சுக்கள், திணைக்களங்களின் பணியாளர்களின் சொந்த நிதிப் பங்களிப் புடன் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களினதும் நிதிப்பங்களிப் பையும் சேர்த்து நிவாரண உதவியை முன்னெடுக்கும் அதேநேரம் உள்ளூராட்சி மன்றங்கள் அரச (சபை) நிதியை பயன்படுத்த அனுமதிப்பதில்லை என வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

வடக்கு மாகாணத்தில் பணியாற்றும் சகல அரச ஊழியர்களிலும் நிறைவேற்று அதிகாரிகள் ஆயிரத்து 500 ரூபாவும், இடை நிலை உத்தியோகத்தர்கள் ஆயிரம் ரூபாவும், தொழிலாளர்கள் 500 ரூபாவும் நிதிப் பங்களிக்கும் அதேநேரம் வடக்கு மாகாணத்தில் உள்ள 2 ஆயிரத்து 224 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களினதும் சொந்தப் பங்களிப்பிலான நிதியையும் சேர்த்து பிரதேச செயலகங்கள் உறுதி செய்யும் பட்டியலிற்கு அமைய நிவாரண வழங்கலை மேற்கொள்ளலாம்.

இதேநேரம் அந்த உதவியை பொருளாக பக்கம் 02



## மருத்துவத் துறையின் அனைத்து ஊழியர்களுக்கும் சிறப்பு அனுமதி

கொழும்பு, ஏப்.11

சுதேச மருத்துவத் துறை உட்பட அனைத்து மருத்துவத் துறை உத்தியோகத்தர்களும் தமது அலுவலக அடையாள அட்டையை ஊரடங்கு அனுமதிப்பத்திரமாக (பாஸ்) பயன்படுத்த முடியும் என்று பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

இந்தத் தகவலை அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

அத்தியாவசி சேவையில் ஈடுபட அனுமதிக்கப்பட அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் தமது அலுவலக அடையாள அட்டைக்கு மேலதிகமாக பக்கம் 02

## யாழ்.போதனா வைத்தியசாலையிலும் மிகவிரைவில் கொரோனாச் சோதனை

யாழ்ப்பாணம், ஏப்.11

யாழ்.போதனா வைத்தியசாலையிலும் மிக விரைவில் கொரோனா தொற்றுத் தொடர்பான மருத்துவ ஆய்வுகூடப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் ரி.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

இதன் மூலம் எதிர்வரும் வாரங்களில் ஒரு நாளில் 144 பேருக்கு இந்தப் பரிசோதனை மேற்கொள்ளும் வசதிகள் இங்கு ஏற்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடமும், யாழ்.போதனா வைத்திய சாலையும் இணைந்து கொரோனா பக்கம் 02

## மதுபானத் தயாரிப்பு முறை வெளியிடுவோருக்கு சிறை



கொழும்பு, ஏப். 11

மதுபானம் தயாரிக்கும் செயன்முறைகளை சமூக ஊடகங்களில் பதிவிடும் நபர்கள் இரண்டு வருட கடூழியச் சிறைத் தண்டனையை எதிர்கொள்ள வேண்டிவரும் எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண அறிவித்துள்ளார்.

## பொறுப்பின்றில்லாது பொய் கூறியுள்ளார் சுவிஸ் போதகர்

### மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் சாடல்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 11

காய்ச்சல் உள்ளிட்ட நோய் அறிகுறிகள் இருந்தும் சுவிஸ் போதகர் விமான நிலையத்தில் பொறுப்பில்லாமல் கூறிய பொய்யினால் 7 பேர் தொற்றுக்குள்ளாகினர். யாழ்.மாவட்டம் இன்று இந்த நிலைக்குத் தள்ளப்பட அது காரணமாகவும் அமைந்திருக்கின்றது. இனிமேலும் யாழ்.மாவட்டம் பாதுகாப்பாக இருக்க அனைவருக்கும் பொறுப்புணர்வு வேண்டும் என்று யாழ்.மாவட்டத்தில் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக மத்திய சுகாதார அமைச்சினால் நியமிக்கப் பட்டுள்ள சமுதாய மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகங்களைச் சந்தித்து கருத்து கூறும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

யாழ்.மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் எவரும் அடையாளம் காணப்படவில்லை. சுவிஸ் பக்கம் 02

## ஆட்டக்காரிக்கு நிர்ணய விலை இல்லையா?

கொழும்பு, ஏப்.11

அரிசி வகைகளுக்கு அதிகூடிய சில்லறை விலையை பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபை நிர்ணயித்துள்ளது. ஆயினும் வடக்கில் உற்பத்தி செய்யப்படும் ஆட்டக்காரி மற்றும் மொட்டைக்கறுப்பன் அரிசி. ரகங்களுக்கான விலை நிர்ண பக்கம் 02

## பாடசாலை 2ஆம் தவணை ஆரம்பம் தாமதமடையும்

பாடசாலைகளில் இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் காலம் நீடிக்கப்படலாம் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலைகளில் இரண்டாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளபோதும் சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கு அமைய மேலும் தாமதமடையலாம் என அமைச்சின் செயலாளர் என்.எச். சித்ரானந்த தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர், அடையாளங்காணப்பட்ட பாடசாலை களில் கிருமித் தொற்று நீக்கி விசிறும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## யாழ். உட்பட 6 மாவட்டங்களில் கொரோனா சிறப்புச் சோதனை!

### சுகாதார அமைச்சு திட்டம்

கொழும்பு, ஏப். 11

யாழ்ப்பாணம் உள்பட 6 மாவட்டங்களில் அறிகுறிகள் எதுவுமின்றி, மக்களோடு மக்களாக உள்ள கொரோனா தொற்றாளர்களைக் கண்டுபிடிக்க, பொதுமக்களிடையே பரிசோதனைகளை முன்னெடுக்க சிறப்புச் செயற்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் தலைமை தொற்று நோயியல் நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொரோனா பரவல் தொடர்பில் உறுதியான பக்கம் 02



## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல்லோரையும் போல இன்னொரு குழுமமும் நம் மத்தியில் உண்டு. அவர்கள் குறித்து யாரும் அதிகம் சிந்திப்பதில்லை. அவர்களின் தற்போதைய கஷ்டத்தை யாரும் புரிந்து கொள்ளவும் முயற்சிப்பதில்லை.

அவர்கள்தாம் நமது தேசத்தின் 'பெருங்குடி மக்கள்.'

இந்த ஊரடங்கு அவர்களைப் புரட்டிப் போட்டுவிட்டது.

அவர்களின் மனத்தாக்கத்தை – மதுவிடாயை – யாரும் கவனத்தில் எடுப்பவர்களாகவோ, சிரத்தை கொள்பவர்களாகவோ இல்லை.

ஊரடங்கு பிறப்பித்து மூன்று வாரங்கள் ஆகிவிட்டது. ஆனால் அவர்களின் வாயைக் குளிர்விக்கும் பானத்தை யாரும் கண்களில் காட்டக் கூட இடமளிக்கவில்லை.

அதன் விளைவுகளை நாம் இப்போது சந்திக்கின்றோம்.

ஊரடங்கில் பூட்டப்பட்டிருந்த மதுச்சாலைகளின் கதவுகள், பூட்டுகள் உடைக்கப்பட்டு உள்ளே இருந்த மதுரபானங்கள் சூறையாடப்படுகின்றன.

ஆங்காங்கே சுயதயாரிப்புகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்றும் தகவல்.

தயாரிக்கத் தெரியாதவர்கள் முளுசிக் கொண்டு விட்டத்தைப் பார்த்தபடி படுத்திருக்கின்றார்கள்.

எப்படி அதைத் தயாரிப்பது என்பது குறித்து முகப்புத்தகத்திலோ, இணையத்திலோ தகவல் பரிமாறினால் கம்பி எண்ண வேண்டிவரும் என்று பொலிஸ் பேச்சாளரே அறிக்கையிட்டு மிரட்டி அடக்கும் நிலைதான் இங்கு.

அவர்களின் பரிதாபம் பற்றிய ஒரு தகவல் இது. ஒரு சில தினங்களுக்கு முன்னர் மருதனார்மடத்தில் நடந்தது.

மருதனார்மடம் சந்தியில் முற்பகலில் ஒரு மூத்த ஊடகவியலாளரை மறித்தார் ஒரு போக்குவரத்துப் பிரிவு சப் இன்ஸ்பெக்டர். அவருடன் பல இராணுவத்தினர், பொலிஸார் நின்றிருந்தனர்.

நமது ஊடகவியலாளர் தமது நிறுவன அடையாள அட்டையைக் காட்டினார். *'அது சரிவராது, அரசின் ஊரடங்கு பாஸ் வேண்டும்'* – என்று அடம் பிடித்தார் விடயம் புரியாத அந்தப் பொலிஸ் அதிகாரி.

ஊடகவியலாளர்கள் தங்கள் அடையாள அட்டைகளையே ஊரடங்கு அனுமதிப்பத்திரமாகப் பயன்படுத்தலாம் என்ற விளக்கத்தை அந்தப் பொலிஸ் அதிகாரிக்கு புரிய வைக்க முயன்றார் நமது நண்பர்.

அந்த இழுபறி விவாதத்தினால் சற்று நேரம் அந்த இடத்தில் தமது நேரத்தை செலவிட வேண்டியவரானார் அந்த ஊடகவியலாளர். அப்போதுதான் அவர் பக்கத்தை அவதானித்தார்.

இளசுகள் முதல் பெரிசுகள் வரை ஓர் எட்டுப் பத்துப் பேரை முழங்காலில் நிறுத்தியிருந்தனர் பொலிஸார்.

தாங்கள் மோட்டார் சைக்கிளில் வழி மறித்தவர் ஊடகவியலாளர் என்று அறிந்ததும் அங்கு நின்ற பொலிஸாரும் இராணுவத்தினரும் உஷாரடைந்து கொண்டனர்.

முட்டுக்காலில் இருப்பவர்களை ஊடகவியலாளர் தமது கமராவினால் படம் எடுக்க இடமளிக்காத மாதிரி இராணுவத்தினர் அவர்களைச் சுற்றி வழி மறைத்து நின்றனர்.

அச்சமயத்தில்தான் அந்த ஊடகவியலாளர், முட்டுக்காலில் இருப்பவர்களை நோக்கினார். எல்லோர் கைகளிலும் போத்தல் அல்லது கான்கள் இருந்தன. அதைக் கண்டதும் நமது ஊடகவியலாளருக்கு மனம் இளகிப் போய்விட்டது.

அவர்களுக்காக அந்தப் பொலிஸ் அதிகாரியுடன் பரிந்து பேச முயன்றிருக்கின்றார்.

*"பாவம், தோட்ட வேலை செய்யவோ, மோட்டார் சைக்கிளுக்கோ எரிபொருள் வாங்க வந்திருப்பார்கள். விட்டு விடுங்கோ!"* – என்று நம்ம ஊடகவியலாளர் பரிந்து கொண்டு பவ்வியமாகப் பேசமுயன்றார்.

அவரை ஏளனத்துடன் பார்த்தார் அந்தப் பொலிஸ் அதிகாரி.

*"வோட்டப் பம்புக்கோ, மோட்டார் சைக்கிளுக்கோ எரிபொருள் இல்லை, தங்கள் உடம்புக்கு எரிபொருள் போட வந்திருக்கினம். ஊரடங்காலை கள்ளு இறக்கின்றவர்களுக்கு வலு மவுசு. இவையள் தங்களுக்கும் வயிறு நிரப்பி, தங்களோடை மிச்சம் கொண்டுபோறதுக்குத்தான் போத்தல்கள், கான்களுடன் வந்திருக்கினம். இங்காலை இணுவில் காரைக்காலிலை நல்ல 'பிரஷ்' கள்ளு எண்டு சொல்லுகினம். அதுதான் ஊரடங்கை மீறி இந்தப் படையெடுப்பு"* – என்றார் அந்தப் பொலிஸ் அதிகாரி.

அதைக் கேட்டதும் முட்டுக்காலில் இருப்பவர்களை ஒரு பார்வை பார்த்தார் நமது ஊடகவியலாளர்.

அவர்கள் முகத்தில் அசடு வழிந்தது. அவர்களுக்காகப் பரிந்து பேசப் போன நமது ஊடகவியலாளரின் முகத்திலும் தான்.

இந்தப் பெருங்குடி மக்களின் கோரிக்கை எல்லாம் ஒன்றே ஒன்று மட்டும்தான்.

இந்த ரகங்கள் எல்லாம் அவர்களைப் பொறுத்தவரை ஒன்றுதான். அவை அனைத்துமே அவர்களுக்கு அத்தியாவசியமான பொருள் போன்றவை.

அதனை அத்தியாவசிப் பொருள்களின் பட்டியலில் சேர்த்து அறிவிக்க வேண்டும். இதுதான் அந்தப் பெருங்குடி மக்களின் இன்றைய ஏகோபித்த எதிர்பார்ப்பு.

யாரேனும் அரசியல்வாதி இவர்களுக்காகக் குரல் கொடுத்து, இவர்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் முயற்சியில் ஈடுபடுவார்களா?

–மின்னல்–

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதா அல்லது நிதியாக வழங்குவதா என்பதை மாவட்டச் செயலாளர்களுடன் உரையாடித் தீர்மானிக்க முடியும்.

வடக்கின் பல உள்ளூராட்சி சபைகள் சபை நிதியில் இருந்து நிவாரண விநியோகம் செய்யகோரியிருந்த போதும் அதற்கு அனுமதி வழங்க முடியாது என தனது உத்தரவை ஆளுநர் பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மருத்துவத் துறையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திணைக்களம் – நிறுவனத் தலைவரின் சான்றுப்படுத்தப்பட்ட கடிதத்தையும் வைத்திருந்தால் மாத்திரமே ஊரடங்கு வேளையில் கடமைக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்திருந்தது.

இந்த நடைமுறை இன்று சனிக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வருகிறது.

எனினும் மருத்துவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தமது அலுவலக அடையாள அட்டையை ஊரடங்கு அனுமதியாகப் பயன்படுத்த முடியும் என்றும் பொலிஸ் தலைமையகம் முன்னர் அறிவித்திருந்தது.

இந்த நிலையில் சுதேச மருத்துவத் துறை உள்பட மருத்துவத் துறையின் கீழ் பணியாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களும் தமது அலுவலக அடையாள அட்டையை ஊரடங்கு அனுமதிப்பத்திரமாக (பாஸ்) பயன்படுத்த முடியும் என்று பொலிஸ் மா அதிபர் அறிவித்துள்ளார்.

## யாழ்.போதனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைரஸ் தொற்றுத் தொடர்பான பரிசோதனை (ரி.சி.ஆர் இயந்திரப் பரிசோதனை) மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் ஒரு தடவையில் 24 பேருக்கு கொரோனா பரிசோதனை செய்ய முடியும். இவ்வாறு ஒரு நாளில் 3 தடவையாக 72 பேருக்கான பரிசோதனை மேற்கொள்ள முடியும்.

தற்போது சுகாதார அமைச்சு யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள ரி.சி.ஆர். இயந்திரத்தையும் இயங்கு நிலையில் வைத்திருக்குமாறு எமக்கு அறிவித்துள்ளது.

இந்த இயந்திரம் வைத்தியசாலையில் செயற்படுமாக இருந்தால் ஒரு நாளில் 72 பேருக்கான பரிசோதனை மேற்கொள்ள முடியும்.

யாழ்.போதனா வைத்தியசாலையிலும், யாழ்.பல்கலைக்கழக மருத்துப பீடத்திலும் இந்தப் பரிசோதனை மேற்கொள்ளப்படுமாயின் ஒரு நாளில் 144 பேருக்கான பரிசோதனைகளைச் செய்து கொள்ளக் கூடிய வசதி ஏற்படும் – என்றார்.

# மருந்து வாங்க என்ற பெயரில் ஹெரோயின் கடத்திய இருவர்

மருந்து சீட்டுகளைப் பயன்படுத்தி, ஹெரோயின் போதைப்பொருள் கடத்திய இருவர், நீர்கொழும்பு பொலிஸாரால், நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள வேளையில், மருந்து சீட்டுகளைப் பயன்படுத்தி, மனைவிக்கு மருந்து எடுக்கச் செல்வதாக ஓட்டோவில் ஜா – எல பிரதேசத்துக்குச் சென்று, அங்கிருந்து நீர்கொழும்பு பகுதிக்கு இவர்கள் ஹெரோயின் கடத்தியுள்ளனரெனத் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து சுமார் 14 கிராமுக்கு அதிகமான ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

# அனைத்து அரிசி ஆலைகளும் அத்தியாவசிய சேவையின் கீழ்

அத்தியாவசிய உணவு வழங்கல், நெல் உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், விநியோகம், உணவு பாதுகாப்பு என்பவற்றை உறுதி செய்வதற்கு அத்தியாவசியமான, அனைத்து அரிசி ஆலைகளையும் கொரோனா தனிமைப்படுத்தல் அத்தியாவசிய சேவையாக மறுஅறிவித்தல்வரை அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் அனைத்து நெல் உற்பத்தி ஆலை உரிமையாளர்கள் தமது தம்மிடமுள்ள நெல் தொகையினை அரிசியாக மாற்ற வேண்டும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

## பொறுப்பின்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதகருடன் தொடர்பில் இருந்த அனைவருக்கும் முதலாம் கட்டப் பரிசோதனைகள் நிறைவடைந்திருக்கின்றன. எனினும் முதல் கட்டப் பரிசோதனையில் 80 தொடக்கம் 90 வீதமானதே அடையாளம் காணப்படும்.

ஆகவே 2ஆம், 3ஆம் கட்டப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் மூலம் தொற்றுள்ளவர்கள் பூரணமாக அடையாளம் காணப்படுகின்றமையுடன், தொடர்ந்து ஊரடங்குச் சட்டத்தின் ஊடாகச் சமூக இடைவெளி பேணப்படுவதன் மூலம் யாழ்.மாவட்டத்திலிருந்து கொரோனா தொற்றை முற்றாக நீக்க முடியும்.

இது இலங்கையின் பிற மாவட்டங்களுக்கு முன்னுதாரணமாக அமையும். மேலும் மாவட்டத்தில் தொற்று இல்லாமையைத் தொடர்ந்து பேணுவதற்காகச் சில கட்டுப்பாட்டு முறைகளை நடைமுறைப் படுத்தவேண்டும்.

குறிப்பாக யாழ்.மாவட்டத்துக்குள் வெளி மாவட்டங்களில் இருந்தும், வெளியிடங்களில் இருந்தும் உள் நுழைவதற்கு 2 தரைவழிப் பாதைகளே உண்டு.

அந்தப் பாதைகளில் பாதுகாப்பை பலப்படுத்துவதுடன், காய்ச்சல் மற்றும் தொற்று தொடர்பான ஆரம்பப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான வசதிகளைச் செய்வதன் மூலம் நிரந்தரமாக நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தலாம். அதற்கு முன்னர் யாழ்ப்பாணத்துக்குள் நுழைபவர்கள் நேர்மையாக தங்களுக்குத் தொற்றிருந்தால் அதனை வெளிப்படுத்தவேண்டும்.

குறிப்பாக சுவிஸ் போதகர் காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் இருந்தும் விமான நிலையத்தில் உண்மையை மறைத்து ஒரு பொய்யைக் கூறியதால் 7 பேர் நோய் வாய்ப்பட்டமையுடன், யாழ்.மாவட்டத்தில் இன்று இந்த நிலை ஏற்படுவதற்குக் காரணமாகவும் அமைந்துள்ளது. ஆகவே மக்களும் பாதுகாப்பாக இருந்து தொற்றிலிருந்து விடுபட அனைவரும் பொறுப்புடன் செயற்பட்டு உதவ வேண்டியது அவசியம் – என்றார்.

## ஆட்டக்காரிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த புதிய விலை நிர்ணயம் நேற்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வருவதாக அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இதனடிப்படையில் நாட்டரிசி/ குத்தரிசி ஒரு கிலோவின் அதிகூடிய சில்லறை விலையாக 90 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சம்பா ஒரு கிலோ சிவப்பு/ வெள்ளை ஒரு கிலோ 90 ரூபாவாகவும், கீரி சம்பா ஒரு கிலோ 125 ரூபாவாகவும், வெள்ளை, சிவப்பு நாடு ஒரு கிலோ 85 ரூபாவாகவும் அதிகூடிய சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்த விலைக் கட்டுப்பாட்டை மீறும் வர்த்தகர்கள் மீது இன்று சனிக்கிழமை தொடக்கம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பாவனையாளர் அதிகார சபை அறிவித்துள்ளது.

## யாழ்.உட்பட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாட்டை எடுக்கும் பொருட்டு இந்தப் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற சிறப்புச் செய்தியாளர் சந்திப்பின்போது சுகாதார அமைச்சின் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் தலைமை தொற்று நோயியல் நிபுணர் சுதத் சமரவீர இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டில் அண்மைய நாள்களில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதில் சிறிய வீழ்ச்சியை அவதானிக்க முடிகிறது. நாம் பரிசோதனைகளை அதிகரித்துள்ள சந்தர்ப்பத்திலேயே அடையாளம் காணப்படுவோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

அதன் ஊடாக நாட்டில் இருக்கும் கோரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகத் தெரிகிறது. எனினும் எமக்கு மற்றொரு சவால் உள்ளது. அதுதான் எந்த நோய் அறிகுறிகள் எதுவும் இல்லாத கோரோனா வைரஸ் தொற்றாளர்கள் இருப்பின் அவர்களை நாம் அடையாளம் காண வேண்டும்.

இதனடிப்படையில் கோரோனா தொடர்பில் அதி அபாய வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, புத்தளம், கண்டி, களுத்துறை ஆகிய மாவட்டங்களும் இரத்தினபுரியில் இரண்டு பொலிஸ் பிரிவுகளுமான பகுதிகளுக்குச் சென்று பொது மக்களிடமிருந்து மாதிரிகளைப் பெற்று பரிசோதனை செய்ய வேண்டும். அப்போது உறுதியாக நாம் கொரோனாவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளோமா என்பதை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

உண்மையிலேயே நாம் கொரோனா பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருந்தால் அடுத்த வாரமாகும்போது, தொற்றாளர்கள் பதிவாகும் எண்ணிக்கை மிகப் பெரியளவிலான வீழ்ச்சியைக் காண வேண்டும். அப்படியானால் மட்டுமே நாம் அன்றாட நடவடிக்கைக்கு மீளலாம்.

இந்தத் தொற்று, சமூகத்தின் மத்தியில் உள்ளதா என்பதை உறுதிசெய்ய, சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்பு பிரிவு நடவடிக்கைகளை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையிலேயே அதி அபாய வலயங்களாகப் பிரகடனம் செய்யப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், யாழ்ப்பாணம், கண்டி மற்றும் இரத்தினபுரியில் இரு பொலிஸ் பிரிவுகளில் பொதுமக்களின் மாதிரிகளைப் பெற்று பரிசோதிக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

எவ்வாறாயினும், தற்போதைய சூழலில், கொரோனா தொற்றாளர்கள் பதிவாவது குறைவடைந்திருந்தாலும், எதிர்வரும் 20 ஆம் திகதிவரை தற்போதுள்ள இறுக்கமான ஊரடங்கு நடைமுறைகளைப் பேண வேண்டும் – என்றார்.

# அவசரப்பட்டு கட்டுப்பாடுகளைத் தளர்த்தாதீர்கள்! உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுப்பு

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக பாதிக்கப்பட்ட நாடுகள் கட்டுப்பாடுகளை தளர்த்துவதில் அவசரம் காட்டக் கூடாது என உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவுவதனை தடுப்பதற்காகத் தற்பொழுது நாடுகளில் பின்பற்றப்பட்டு வரும் முடக்கங்கள் மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் அவசரமாக தளர்த்தப்பட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகின்றது என உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிரதானி டாக்டர் டெட்ரோஸ் அட்ஹானோம் தெரிவித்துள்ளார்.

சில நாடுகளில் பொருளாதார ரீதியினால் பாதிப்புக்கள் காணப்பட்டாலும் கட்டுப்பாடுகளை தளர்த்துவது தொடர்பில் நாடுகள் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டியது இன்றியமையாதது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சில ஐரோப்பிய நாடுகளில் நோய் தொற்று பரவல் குறைவடைந்து செல்வது ஆறுதல் அளிக்கும் அதேவேளை, ஆபிரிக்கா உள்ளிட்ட சில பகுதிகளில் நோய் தொற்றாளர் எண்ணிக்கை உயர்வடைந்து செல்வதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், துரித கதியில் கட்டுப்பாடுகளை



தளர்த்துவது மிகவும் பாரிய ஆபத்துக்களை உருவாக்கக் கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆபிரிக்காவின் கிராமிய பகுதிகளில் மருத்துவ வசதிகள் மிகவும் வரையறுக்கப்பட்ட அடிப்படையில் காணப்படுவதாகவும் இவ்வாறான ஒரு பின்னணியில் நோய்த் தொற்று வேகமாக பரவி வருவது பல்வேறு நெருக்கடிகளை உருவாக்கும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## சர்வதேச விமான நிலையங்களில் சிக்கியிருந்த மூவர் நாடு திரும்பினர்

கொழும்பு, ஏப். 11

சர்வதேச விமான நிலையங்களில் சிக்கியுள்ள இலங்கையர்களில் மூவர் நாடு திரும்பியுள்ளனர்.

ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே இதனைத் தெரிவித்துள்ளார்.

டுபாய் மற்றும் மாலைத்தீவிலிருந்து இந்த மூவரும் நாட்டை வந்தடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களில் இருவர் துபாயிலிருந்து கடந்த புதன்கிழமை இலங்கையை வந்தடைந்துள்ளதுடன், மாலைத்தீவு விமான நிலையத்தில் சிக்கியிருந்த ஒருவர் நேற்றைய தினம் நாட்டை வந்தடைந்துள்ளார்.

ஏனைய 30 பேரையும் எதிர்வரும் நாள்களில் நாட்டிற்கு அழைத்து வருவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக அந்தந்த நாடுகளில் அமைந்துள்ள தூதரகம், உயர்ஸ்தானிகராலயம் மற்றும் கொன்சியூலர் அலுவலகம் ஆகியவற்றுடன் தொடர்புகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

## புதுவருடத்துடன் சில பகுதிகளில் தன்னும் ஊரடங்கைத் தளர்த்துவது பற்றி ஆராய்வு

யாழ்ப்பாணம், ஏப்.11

குடாநாட்டில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு தொடர்கின்ற நிலையில் சில பகுதிகளில் புது வருடத்துடன் ஊரடங்கைத் தளர்த்துவது தொடர்பாக ஆராயப்பட்டு வருகின்றது என் சில செய்தி நிறுவனங்கள் தகவல் வெளியிட்டன.

இது தொடர்பில் வடக்கு ஆளுநர் இலங்கை ஜனாதிபதிக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பாரென தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தென்மராட்சி, தீவகம் மற்றும் வடமராட்சி கிழக்கு பகுதிகளில் ஊரடங்கைத் தளர்த்த ஆலோசிக்கப்பட்டுள்ளது.

வடக்குமாகாணநிலைவரம்தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நேற்று இடம்பெற்ற விசேட கலந்துரையாடலிலேயே இம்முடிவு எடுக்கப்பட்டதாக வடமாகாண பிரதம செயலாளர் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் சில இடங்களில் ஊரடங்கு தளர்த்தக் கூடிய இடங்கள் மொடர்பில் படையினர் மற்றும் சுகாதார அமைச்சு என்பன ஊர் பெயர் விவரங்களை சமர்ப்பித்தனர். இதில் வடமராட்சியின் விவரத்தை கோரிய போது வட மராட்சியின் ஊரடங்கை தளர்த்த படைத்தரப்போ அல்லது சுகாதார அமைச்சோ இணக்கம் தெரிவிக்கவில்லை.

இந்த நிலையிலேயே தென்மராட்சி, வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) ஆகியவற்றுடன் தீவகத்தின் ஊரடங்கினை யும் தளர்த்த முடியும் எனவும் இருப்பி னும் அவை அந்த பிரதேசத்துள் மட்டுமே நடமாட முடியும் எனவும் தடை செய்யப்பட்ட பிரதேசங்களிற்குள் நுழைய முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக்குடாநாட்டின்ஏனைய பகுதிகள் தொடர்பில் அடுத்த வார இறுதியில் தாவடி , அரியாலை, மானிப்பாய் போன்ற தனிமைப்படுத்தல் பிரதேசங் களின் நிலைவரத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்க முடியும் எனத் தெரிவிக்கப்பட்டதோடு கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி, முல்லைத்தீவின் துணுக்காய், பாண்டியன்குளம் ஆகியவற்றுடன் ஒட்டுசுட்டானின் ஒருபகுதி, வவுனியா மாவட்டத்தின் நெடுங்கேணி, செட்டிகுளம் ஆகிய இடங்களின் ஊரடங்கினையும் புதுவருடத்துடன் நீக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தொடர்பில் தாராபுரம் தொடர்பான ஆய்வின் பின்னர் விவரத்தை தெரிவிப்பதாகவும் தெரி விக்கப்பட்டுள்ளது.- இவ்வாறு அந்நிறு வனங்களின் செய்திகள் தெரிவித்தன.

## திருமலை மாவட்டத்தில் 2,196 பேர் சுய தனிமையில்!

திருமலை, ஏப். 11

திருகோணமலை மாவட்டத்தில் வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த 744 பேரும், உள்நாட்டின் பிற மாவட்டங்களில் இருந்து வருகை தந்த ஆயிரத்து 452 பேரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று மாவட்டஅரசஅதிபர்ஜே.எஸ்.டி.எம்.அசங்க அபேவர்தன தெரிவித்தார்.

கொரோனா தடுப்புக்கான தனிமைப்படுத்தல் செயற்பாடு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ், கிரமமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

வெளிநாடுகளில் இருந்து வருகை தந்த 744 பேரும், உள்நாட்டின் பிற மாவட்டங்களில் இருந்து வருகை தந்த ஆயிரத்து 452 பேரும் சுய தனிமைப்படுத்தல் செயற்பாட்டுக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், அவர்களுள் வெளிநாடுகளில் இருந்த வந்த 676 பேரினதும், உள்நாட்டின் பிற மாவட்டங்களில் இருந்து வந்த 656 பேரினதும் சுய தனிமைப்படுத்தல் செயற்பாடு பூர்த்தியடைந்துள்ளது.

அத்துடன், 10 சந்தேகத்துக்கிடமான நபர்கள் அடையாளம் காணப்பட்டு உரிய மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்கள் எவருக்கும் கொரோனா தொற்று காணப்படவில்லை என்று ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டம் இற்றை வரை கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பாக உள்ளது. இங்கு எவருக்கும் இதுவரை நோய்த்தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை. தொடராக இதனைப் பேண அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் – என்றார்.

## ஆனயிறவு ஊடாக யாழ் திரும்பிய ஒருவர் குறித்து விவரம் கோரல்

ஆனையிறவு சோதனை மையம் ஊடாக நேற்று வியாழக்கிழமை யாழ். திரும்பிய பொதுமகன் ஒருவர் பற்றிய தகவல்களை கரவெட்டி பிரதேச செயலகம் கோரியுள்ளது.

படையினரது சோதனை சாவடியில் தனது பெயராக இராசா மாணிக்கம் (தேசிய அடையாள அட்டை இல - 527452530வி இனையும் முகவரியாக இல.81,கரவெட்;டி வடக்கினையும் அவர் பதிவு செய்துள்ளார்.

எனினும் குறித்த முகவரியில் அவரை இனங்காண முடியாத நிலையில் கரவெட்டி பிரதேச செயலகம் அவரது தகவல்களை கோரியுள்ளது. தகவல் தெரிந்தோர் கரவெட்டி பிரதேச செயலக தொலைபேசி இலக்கம் 0212263258 இற்கு தகவல் தர கோரப்பட்டுள்ளது.

# மனநலம் பாதித்த 13 வயதுச் சிறுமி மீது பாலியல் வன்புணர்வு; ஐவர் கைதாகினர்

### 17 முதல் 70 வயது வரையானோரே சிக்கினர் அவர்களில் ஒருவர் ஆளுங்கட்சி அரசியல்வாதி

மனநலம் பாதிக்கப்பட்ட 13 வயதுச்சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்தனர் என்ற குற்றச்சாட்டில் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தணமல்வில பிரதேச சபை உறுப்பினர் ஆர்.ஏ. ரணவீர உள்ளிட்ட 5 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் எம்பிலிபிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து அவர்களுக்கு ஏப்ரல் 16 ஆம் திகதி வரை விளக்கமறியல் விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மொனராகலை, செவணகலை, கிரிவெவ பகுதியைச் சேர்ந்த சிறுமியை மூன்றுமாதங்களுக்கும் மேலாக பாலியல் துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளனர் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அந்தச் சிறுமி, மருத்துவ பரிசோதனை மற்றும் சிகிச்சைக்காக அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் 17 முதல் 70 வயதுக்கு உட்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அந்தச் சிறுமி வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவர் என அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தைக் கண்டித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது டுவிட்டர் பதிவில், சம்பவம் குறித்து தற்போது நடைபெற்று வரும் விசாரணைகளில் எவ்வித அரசியல்தலையீடும்இடம்பெறாது என்றும் உறுதியளித்துள்ளார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## சாத்தானுடன் ஒப்பந்தம்

'கரணம் தப்பினால் மரணம்' என்று கூறக்கூடிய ஆபத்தான அரசியல் சித்து விளையாட்டுக்கு ராஜபக்ஷக்கள் தயாராகின்றார்கள் என்பது போலவே தோற்றுகின்றது.

சுதந்திரத் தேர்தல் ஆணையம், ஜனாதிபதிக்கு முகவரியிட்டு அனுப்பிய கடிதத்துக்கு ஜனாதிபதி சார்பில் அவரின் செயலாளர் பதிலளித்திருக்கின்றார்.

அந்தப் பதிலும் –

கொரோனாவைக் கட்டுப்படுத்தல் தொடர்பாக ராஜபக்ஷக்கள் அரசின் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராய்ச்சி தெரிவிக்கின்ற கருத்துக்களும் –

பிழையான ஒரு குதிரையை நம்பி ஓட்டப்பந்தயத்தில் பெருந்தொகை பணத்தைக் கட்டும் ரேஸ் பந்தய விசிறி போன்று ஓர் அரசியல் 'ரிஸ்கை' எடுப்பதற்கு ராஜபக்ஷக்கள் தயாராகி வருகின்றனர் என்பதையே காட்டுகின்றன.

ஏப்ரல் 25ஆம் திகதி நடக்கவிருந்து ஒத்திவைக்கப்பட்ட தேர்தலை 14 நாள்கள் கடந்து மே 30 ஆம் திகதிக்குள் நடத்துவதற்குத் தாராளமாக வாய்ப்பு உள்ளமையால் இந்த விடயம் தொடர்பில் [தேர்தல் நடத்துவது தொடர்பில்] உயர்நீதிமன்றத்தின் ஆலோசனையைக் கோரவேண்டிய நிலைமை ஏதும் எழவில்லை என்று ஜனாதிபதி கருதுகின்றார் என அவரின் செயலாளர் சுயாதீன தேர்தல் ஆணையத்தின் ஆணையர்களுக்கு அறிவித்திருக்கின்றார்.

அதாவது, அறிவிக்கப்பட்டு ஒத்திவைக்கப்பட்ட தேர்தல் மே 15ஆம் திகதிக்கும் 30ஆம் திகதிக்கும் இடையில் நடத்தி முடிக்க கூடியதாக உள்ளது. அப்படி நடத்தினால் சட்டச் சிக்கல் ஏதும் வரப்போவதில்லை. பிறகேன் நான் இவ்விடயத்தில் உயர்நீதிமன்றத்தின் பரிந்துரையைக் கோரவேண்டும்? – இதுதான் ஜனாதிபதி கோட்டாபய தரப்பின் நிலைப்பாடு.

வரும் ஏப்ரல் 19ஆம் திகதிக்குள் கொரோனாவைக் 'கொன்ட்ரோல்' பண்ணிவிடுவோம் என்று சுகாதா அமைச்சர் கூறுகின்ற விடயத்தின் பின்னணியிலும் அதே விவகாரம் தான் உள்ளது.

மே 15இற்கும் மே 30இற்கும் இடையில் பொதுத்தேர்தலை நடத்தக் கூடியதான சூழ்நிலையை நாம் ஏற்படுத்தித் தருவோம் என்பதைத்தான் நாட்டின் சுகாதார அமைச்சர் அறிவிக்கின்றார்.

பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. இரண்டாகப் பிளந்து போன நிலையில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்களை வைத்துக் கொண்டே இந்தத் தேர்தலில் அந்தக் கட்சியை உண்டு, இல்லை என்று பண்ணி தமது வெற்றியினை உறுதிப்படுத்திக் கொள்வோம் என்ற உச்சபட்ச நம்பிக்கையில் இருக்கின்றது ராஜபக்ஷக்களின் தரப்பு. அதற்காக இந்தத் தேர்தலை எந்த விலை கொடுத்தாவது பிந்தாமல் நடத்திவிட வேண்டும் என்பதில் தீவிரத்தனமான உறுதியில் அது உள்ளது.

அதற்காக –

கொரோனா வைரஸ் அடக்கப்பட்டு விட்டதோ, இல்லையோ, அதை அடக்கி விட்டதாகக் காட்டி, அந்தக் சூழலில் தேர்தலை நடத்தி முடிப்பதுதான் திட்டம்.

அறிவிக்கப்பட்ட தேர்தலை மே கடைசிக்குள் நடத்தினால் தான் உண்டு. புதிய நாடாளுமன்றம் ஜூன் 2ஆம் திகதிக்கு முன் கூடவேண்டும். இல்லையேல், அரசமைப்பு நெருக்கடி வரும்; இப்போதைய தேர்தலுக்குத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் புதிதாகத் தேர்தல் நடைமுறைகள் ஆரம்பமாகி, புதிதாக வேட்பு மனுத்தாக்கல் செய்யும் நிலைமை வந்து விடலாம்.

அப்படி நடந்தால், புதிய வேட்புமனுத் தாக்கலுக்கு முன்னர், இதுவரை பிளவுண்டு நின்ற – நிற்கின்ற – ஐ.தே.க. தரப்புகள் மீண்டும் ஐக்கியமாகி, பலமான எதிரணி வேட்புமனுப் பட்டியல்களை தாக்கல் செய்யும் வாய்ப்புக் கிட்டி விடலாம்.

அதனால்தான் எப்படிப் பட்டாயினும், பிளவுபட்ட ஐ.தே.க. தரப்புகளின் வேட்புமனுக்களோடு இந்தத் தேர்தலை உரிய காலத்துக்குள் – காலம் காலாவதியாக முன்னர் – நடத்தி முடிக்க வேண்டும் என்பதில் ராஜபக்ஷக்கள் மிக உறுதியாக உள்ளனர்.

அதற்காக கொரோனா ஒழிக்கப்பட்டு விட்டது என்று படத்தைக் காட்டமுயலுகின்றது ராஜபக்ஷ ஆட்சிப்பீடம்.

கொரோனா வைரஸை அடக்கி விட்டோம் என்று தளத்தில் அவசரப்பட்டு அரசியல் கோட்டை கட்ட முனைவது மிக ஆபத்தான – ரிஸ்க்கான – அரசியல் நகர்வு.

குதிரைப் பந்தயத்தில் பிழையான குதிரை மீது அதீத நம்பிக்கையுடன் பெரும் தொகைப் பணத்தைக் கட்டும் ஆபத்தான் காரியத்துக்கு இது ஒப்பானது.

கொரோனா வைரஸை அடக்கி விட்டதான மமதையில் காரியம் பண்ணுவது சாத்தானுடன் ஒப்பந்தம் செய்வதற்கு சமனானது. பட்டுத் தெளியட்டும் ராஜபக்ஷக்கள்.

# நாங்கள் தனிமைப்படுத்தலுக்கு சுயவிருப்பிலேயே சென்றோம்!

## முன்னாள் எம்.பி. காதர் மஸ்தான் விளக்கம்



கொழும்பு, ஏப். 11

சுயவிருப்பின் பெயரிலேயே தனிமைப் படுத்தலுக்கு எம்மை உட்படுத்தினோம். இந் நிலையில் நாம் சுகாதார பிரிவால் தனிமைப் படுத்தப்பட்டுள்ளோம் என அரசியல் காழ்ப்பு ணர்ச்சியால் போலி தகவல் பரப்புகின்றனர் என வன்னி மாவட்ட முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் இன்று அவர் வெளியிட் டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட் டுள்ளவை வெளமாறு:-

கடந்த மார்ச் 18ஆம் திகதி மன்னார் தாராபுரத்தில் இடம்பெற்ற மரண இறுதிச் சடங்கொன்றில் கலந்துகொண்டிருந்தேன். இந்தச் சடங்கில் வெளிநாட்டிலிருந்து வருகைதந்து, பதினான்கு நாள்கள் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட நபரொருவர் புத்தளத்திலிருந்து வந்து கலந்து கொண்டிருந் தார் எனவும் அவருக்கு கொரொனா தொற்று இருப்பதாக ஏப்ரல் 7 ஆம் திகதி உறுதி செய்யப் பட்டதாக தெரியவந்தது.

அந்த மரணச் சடங்கில் நானும் எனது சகோதரரும் கலந்து கொண்டிருந்தோம். இச்சம்பவம் நடைபெற்று இருபது நாள்கள் கடந்திருந்த நிலையில் மேற்படி நபருக்கு கொரொனாத் தொற்று உள்ளதை அறிந்து கொண்ட நான் எனது சுய விருப்பத்தின் பேரி லேயே பொலிஸார் மற்றும் சுகாதார அதி காரிகளுக்கு விடயத்தைத் தெரியப்படுத் தினேன்.

அதனடிப்படையில் என்னிடம் விவரங் களைக் கேட்டறிந்த சுகாதாரப் பரிசோதகர் மற்றும் அதிகாரிகள் எமக்கு கொரோனா தொற்றுக்கான எந்தவித அறிகுறிகளும் இல்லை என்பதை உறுதி செய்தமையோடு தேவையான ஆலோசனைகளையும் வழங் கினர். தனிமைப்படுதலுக்கான ஆலோச னைகள் எதையும் வழங்கவில்லை.

இருப்பினும் நானும் எனது சகோதரரும் எமது குடும்பத்தினர், பாதுகாப்பு உத்தியோ கத்தர்கள் உட்பட அனைவரும் நாமே சுய தனிமைப்படுத்தலுக்கு எம்மை உட்படுத்திக் கொண்டுள்ளோம். இதுவரையில் நாம் எவ் வகையிலும் வெளிச் செல்லவில்லை. என்னு டையதும் குடும்பத்தினரதும் பொதுமக்களி னதும் பாதுகாப்பைக் கருதியே இவ்வாறு செயற்படுகின்றேன்.

எனினும் சில ஊடகங்கள் எனக்கு கொரோனா தொற்று இருப்பதாகவும் அதி காரிகளினால் தனிமைப்படுத்தப்பட்டிருக்கி றேன் எனவும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிடுகின்றமையை நான் அறிகின்றேன்.

இது மிக மனவருத்தத்திற்குரியது. பொய் யான தகவல்களின் அடிப்படையில் வெளி யிடப்பட்ட செய்திகளாகும். இதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

இத்தகைய செயற்பாடுகளை என் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டுள்ள சில சக்திகள் மக்களிடமிருந்து என்னை அந்நியப்படுத்தும் நோக்கில் முன்னெடுக்கின்றன என நான் கருதுகின்றேன். - என அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# இறுகிப்போய் இருக்கின்ற இதயங்களைச் சந்தோசப்படுத்த புத்தாண்டைக் கொண்டாடுங்கள்; ஆனால் கட்டுப்பாட்டுடன்!

## கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் கு.சுகுணன் தெரிவிப்பு



கொரோனா வைரஸ் எமது பிரதேசங்களில் அச்சுறுத்துவதனால் புத்தாண்டு கொண்டாட் டங்கள் களைகட்டாது என்ற போதிலும் கொண் டாட நினைப்பவர்கள் சுகாதார பழக்க வழக் கங்களையும் அரசாங்க அல்லது சுகாதார தி ணைக்களத்தின் அறிவுறுத்தல்களையும் கடைப்பிடித்து கொண்டாடுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் கு.சுகுணன் தெரிவித்தார்.

மேலும் சித்திரை புத்தாண்டை கடந்த காலங் களில் தமிழ், சிங்கள மக்கள் வீரதீர விளை யாட்டுகளில் கழித்தனர். ஒரு பக்கம் தின்பண் டங்கள். இன்னொரு பக்கம் புத்தாடை ஒளிவீச, அனுஷ்டானங்கள் களை கட்டியிருந்தன. எமது பிரதேசங்களில் இந்த முறை அந்தக் கொண் டாட்டங்களை நான் எதிர்பார்க்கவில்லை. ஏனென்றால் இந்தக் கொரோனா வைரஸ்தற் குக் காரணம் ஆகும். எங்கள் அனைவரையும் வீட்டுக்கு உள்ளேயே அது அடக்கி வைத்தி ருக்கிறது.

இருந்தாலும் தமிழ் சிங்கள மக்களுக்கு என்னால் கூறக்கூடிய ஒரு விடயம் என்ன வென்றால் இறுகிப்போய் இருக்கின்ற இதயங்களை சந்தோசப்படுத்த நீங்கள் இந்த கொண்டாட்டங்களை நிச்சயமாக கொண்டாட வேண்டும். ஆனால் பொது சுகாதார பழக்க வழக்கங்களையும் அரசாங்க அல்லது சுகாதார திணைக்களத்தின் அறிவுறுத்தல்களையும் நீங்கள் நிச்சயமாக இறுக்கமாக கையாள வேண்டும்.

பழைய ஆடைகள் இருந்தாலும் அதை சலவை செய்து புது ஆடைகளாக அணிந்து வீட்டில் தின்பண்டங்களை செய்து நீங்கள் இறைவனை வணங்கி இந்த கொண்டாட் டங்களை வீட்டுக்குள்ளேயே கொண்டாட வேண்டும். எனினும் பட்டாசு வெடிக்கத் தேவையில்லை . வீட்டுக்குள் நீங்கள் கொண்டாடும் பொழுது அந்த சமூக இடை வெளி எனப்படுகின்ற ஒவ்வொருவருக்கும் இடையிலான இடைவெளியை நீங்கள் ஒரு மீட்டருக்கு கூடிய தூரம் பின்பற்றிக் கொள்ள வேண்டும்.

அந்த வகையில் பொதுச் சுகாதார பழக்க வழக்கங்களோடு, மகிழ்ச்சியும் பொங்க இந்த புத்தாண்டு கொண்டாட்டங் களை வீட்டுக்குள்ளேயே கொண்டாடுங்கள். என்றார் அவர்.

## 12 பேர் தியத்தலாவைக்கு

கொரோனா தொற்றாளர் ஒருவருடன் தொடர்புகளை பேணியவர்கள் என உறுதிப் படுத்தப்பட்ட 12 பேர் நேற்று தியத்தலாவை தனிமைப்படுத்தல் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அக்குறணை பிரதேசத்தைச் சேர்ந்த 8 பேரும் பதுளையைச் சேர்ந்த 4 பேருமே தியத்தலாவைக்கு அழைத்துச் செல லப்பட்டனர்.

## நாளை

**12.04.2020**

**ஞாயிற்றுக்கிழமை**

நட்சத்திரம்: கேட்டை பி.இ 12.48

திதி : பஞ்சமி மு.இ 11.15

இராகுகாலம் : 4.36 - 6.06

சுப நேரம் : 9.06 - 10.36

# ஒரு லட்சம் கொரோனா சாவுகள் 16 லட்சம் பேருக்குத் தொற்று

உலக உயிர்கொல்லி நோயான கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் ஒரு லட்சம் பேர் இது வரையில் உயிரிழந்திருக்கின்றனர். நேற்றிரவு வரை ஒரு லட்சத்து 260 பேர் உயிரிழந்தனர்.

210 நாடுகள் மற்றும் தனியாட்சி நிலங்களில் பரவியுள்ள கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 16 லட்சத்து 47 ஆயிரத்து 635 ஆக உயர்ந்துள்ளது.

இவற்றுக்கு மத்தியில் நிம்மதி தரும் புள்ளிவிவரமாக 3 லட்சத்து 69 ஆயிரம் பேர் இந்த நோய்த் தொற்றிலிருந்து குணமாகி வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

எந்தவொரு நாட்டிலும் பார்க்க அமெரிக்காவிலேயே கொரோனா பாதிப்பு அதிகமாக உள்ளது. அங்கு 4 லட்சத்து 78 ஆயிரம் பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. உயிரிழப்பு எண்ணிக்கையிலும் முதல் இடத்தை அது மிக வேகமாக நெருங்கி வருகின்றது.

அமெரிக்காவில் 17 ஆயிரத்த 919 பேர் இதுவரை உயிரிழந்திருக்கின்றனர். தற்போது வரை முதலிடத்தில் உள்ள இத்தாலி நாட்டைவிட வெறும் 930 மட்டுமே அமெரிக்கா குறைவாக இருக்கின்றது. இன்று ஒரு நாள் கடப்பதற்கிடையில் அமெரிக்கா முதலிடத்தைப் பிடித்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஸ்பெயின் நாட்டில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 970. அதேபோன்று பிரான்ஸ் நாட்டில் 12 ஆயிரத்து 210 பேரி உயிரிழந்திருக்கின்றனர். பிரிட்டனில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் 8 ஆயிரத்து 958ஆக உயர்ந்துள்ளது.

ஈரானில் 4 ஆயிரத்து 232 பேரும் சீனாவில் 3 ஆயிரத்து 336 பேரும் பெல்ஜியத்தில் 3 ஆயிரத்து 19 பேரும் ஜேர்மனியில் 2 ஆயிரத்து 607 பேரும் நெதர்லாந்தில் 2 ஆயிரத்து 511 பேரும் உயிரிழந்திருக்கின்றனர்.

ஐரோப்பாக் கண்டத்தில் மட்டும் 68 ஆயிரத்து 801 பேர் உயிரிழந்திருக்கின்றனர். ஆசியாவில் 10 ஆயிரத்து 104 பேரும் ஆபிரிக்காவில் 676 பேரும் உயிரிழந்திருக்கின்றனர்.

49 ஆயிரத்து 723 பேரின் நிலை தொடர்ந்தும் கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் மேலும் அதிகரித்துச் செல்லும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# மொஸ்கோ அருகே முதியோர் இலத்தில்

## தீ விபத்து; 4 பேர் சாவு

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவின் மேற்கு பகுதியில் உள்ள முதியோர் இல்லத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் 4 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

குன்ட்சோவோ நகரில் முதியோர் இல்லத்தில் பலர் தங்கியுள்ளனர். நேற்றுமுன்தினம் இரவு முதியோர் இல்லத்தில் இருந்த அனைவரும் அயர்ந்து தூங்கி கொண்டிருந்தபோது தீ விபத்து ஏற்பட்டது.

மளமளவென கொழுந்துவிட்டு எரிந்த தீ, கண் இமைக்கும் நேரத்தில் முதியோர் இல்லம் முழுவதும் பரவியது. இதனால் உள்ளே இருந்த அனைவரும் தீயில் சிக்கிக்கொண்டனர்.

இது பற்றி தகவல் அறிந்து விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் நீண்ட நேரம் போராடி தீயை அணைத்தனர். ஆனால் அதற்குள் தீயின் கோரப்பிடியில் சிக்கி 4 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர்.

மேலும் ஒரு தீயணைப்பு வீரர் உள்பட 10 பேர் பலத்த தீக்காயம் அடைந்தனர். அவர்கள் உடனடியாக மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்பு எண் ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.

# மே 3 வரை இத்தாலியில் ஊரடங்கு நீடிப்பு

இத்தாலியில் மே 3 ஆம் திகதி வரை ஊரடங்கு நீட்டிக்கப்படலாம் என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது குறித்து இத்தாலியின் முக்கியச் செய்தி நிறுவனங்கள் தரப்பில், "இத்தாலியில் பிரதமர் ஜிசப்பே கான்டே சாலையோரங்களில் மக்கள் உடற்பயிற்சி செய்வதைத் தடைசெய்ய உள்ளார். மேலும், இத்தாலியில் மே 3 ஆம் தேதி வரை ஊரடங்கு நீட்டிக்கப்படலாம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு முடிவு குறித்து மருத்துவ நிபுணர்கள் மற்றும் தலைவர்களுடன் இத்தாலி பிரதமர் விரைவில் ஆலோசனை நடத்த உள்ளார் என்றும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஒரு மாதமாக கரோனா வைரஸுக்கு உயிரிழப்புகள் அதிகரித்த நிலையில், கடந்த சில நாட்களாக இத்தாலியில் உயிரிழப்பு குறைவு, பாதிப்பு குறைவு, குணமடைந்தோர் எண்ணிக்கை அதிகரிப்பு போன்றவை நம்பிக்கையூட்டுவதாக அமைந்துள்ளன. .

# மருத்துவ உபகரணங்களின் ஏற்றுமதிக்கு அமெ. தடை!



அமெரிக்காவில் கொரோனா தீவிரமடைந்து வரும் நிலையில் மருத்துவ உபகரணங்கள் பலவற்றின் ஏற்றுமதிக்கு அந்த நாடு தடை விதித்துள்ளது..

அந்நாட்டில் இதுவரை 4 லட்சத்து 69 ஆயிரம் பேருக்கு வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. வைரஸ் பாதிப்பு காரணமாக 16 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவில் பாதிக்கப்பட்டவர்களின் சிகிச்சைக்குத் தேவைப்படும் செயற்கை சுவாசக்கருவி உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகிறது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர்கள் உள்ளிட்ட மருத்துவ ஊழியர்களுக்கும்கூட முகக்கவசங்கள் உள்ளிட்ட பாதுகாப்பு உபகரணங்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு நிலவுகிறது.

இந்த நிலையில், அதிகரித்து வரும் வைரஸ் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை, மருத்துவ உபகரணங்களின் தேவை அதிகரிப்பு ஆகிய காரணங்களால் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மருத்துவ உபகரணங்களில் கொரோனா சிகிச்சைக்கு தேவைப்படும் அனைத்து உபகரணங்களையும் ஏற்றுமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தரவை அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் வெளியிட்டுள்ளார்.

## கொரோனா பரவலைத் தடுப்பதற்காக

# ஊரடங்கு உத்தரவு போட்ட நகர பிதா சுட்டுக் கொலை!

## மெக்ஸிக்கோவில் போதைக் கும்பல் பயங்கரம்

மெக்சிகோவில் கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு பிறப்பித்த நகர பிதா சுட்டுக் கொல்லப்பட்டார். அங்கு செல்வாக்குச் செலுத்தி வரும் போதைப்பொருள் கடத்தல் கும்பலே அவரைச் சுட்டுக்கொன்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட அமெரிக்காவின் அண்டை நாடான மெக்சிகோவிலும் கொரோனா வைரஸ் தொற்று வேகமாகப் பரவிவருகிறது. அந்த நாட்டில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். சுமார் 200 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனிடையே கொரோனா பாதிப்பு அதிகம் உள்ள அமெரிக்காவில் இருந்து யாரையும் மெக்சிகோவுக்குள் அனுமதிக்கக்கூடாது எனக் கூறி அந்த நாட்டு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து, அமெரிக்காவுடனான எல்லைகளை மெக்சிகோ மூடியது. எனினும் சில எல்லையோர நகரங்களில் கொரோனா வைரஸ் தாக்கம் தீவிரமாக உள்ளது.

வைரஸ் பரவலை கட்டுப்படுத்த மத்திய அரசும், அந்தந்த மாகாண அரசுகளும் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

நாட்டின் தெற்கு மாகாணமான குயின்டானரூவில் உள்ள மகஹூல் நகர பிதா ஓபிட் துரோன் கோமஸ், தனது நகரில், கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு பிறப்பித்தார்.

அந்த நகரில் வாகன போக்குவரத்து முடக்கப்பட்டது. கடைகள் அடைக்கப்பட்டன. அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டுமே மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டும் என அறிவுறுத்தப்பட்டனர்.

இதனிடையே மகஹூல் நகரில் போக்குவரத்து முழுமையாக முடக்கப்பட்டதால் அந்த நகரை சேர்ந்த போதைப்பொருள் கும்பல்கள் பிற நகரங்களுக்கு போதைப்பொருளை கடத்த முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் போக்குவரத்து தடையை உடனடியாக நீக்கும்படி மேயர் ஓபிட் துரோன் கோமசுக்கு போதைப்பொருள் கும்பல்கள் கொலை மிரட்டல் விடுத்தன. ஆனால் ஓபிட் துரோன் கோமஸ் அதனை பொருட்படுத்தவில்லை.

இந்த நிலையில் ஊரடங்கின் நிலைமை குறித்து கண்காணிப்பதற்காக மேயர் ஓபிட் துரோன் கோமஸ் மினிபஸ் ஒன்றில் பயணம் செய்தார். இதனை அறிந்த போதைப்பொருள் கும்பல் ஒன்று, காரில் வந்து மினிபஸ்சை வழிமறித்தனர்.

பின்னர் அந்த கும்பல் ஓபிட் துரோன் கோமசை மினிபஸ்சில் இருந்து இறக்கி துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பி சென்றது. இதில் படுகாயம் அடைந்து உயிருக்கு போராடிய அவரை உடனிருந்த அதிகாரிகள் மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர்.

அங்கு அவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தார். மக்களின் நலனுக்காக ஊரடங்கு பிறப்பித்த மேயரை போதைப்பொருள் கும்பல் சுட்டுக் கொன்ற சம்பவம் மெக்சிகோவில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இந்த சம்பவத்துக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ள அந்த நாட்டின் அதிபர் லோபஸ் ஒப்ரடோர் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என உறுதியளித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir



# தமிழகத்தில் ஊரடங்கை 2 வாரம் நீடிக்க பரிந்துரை

சென்னை, ஏப்.11

தமிழகத்தில் கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கு ஏப்ரல் 14ஆம் திகதிக்குப் பின்னரும் 2 வாரங்களுக்கு ஊரடங்கை நீட்டிக்க முதல்வர் எடப்பாடி பழனிசாமியிடம் மருத்துவ வல்லுநர் குழு பரிந்துரை செய்துள்ளது.

கொரோனா வைரசை கட்டுப்படுத்தும் வகையில் இந்தியாவில் பிறப்பிக்கப்பட்ட 21 நாள் ஊடரங்கு ஏப்ரல் 14ஆம் திகதி முடிவடைகின்றது. எனினும் கொரோனா தொற்று தொடர்ந்தும் பரவி வருவதால் ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்படவேண்டும் என்று பல தரப்பினரும் மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி வருகின்றன.

தமிழகத்தில் நேற்று மேலும் 77 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 911ஆக அதிகரித்துள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 9ஆக அதிகரித்துள்ளது என்று தலைமைச் செயலாளர் சண்முகம் தெரிவித்தார்.

இந்த நிலையில், கொரோனா தாக்கத்தைக் கட்டுப்படுத்த அமைக்கப்பட்ட 19 மருத்துவர்கள் குழுவுடன் இன்று முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி காணொலிக் காட்சி மூலம் ஆலோசனை நடத்தினார்.

முதல்வர் பழனிசாமியுடனான ஆலோசனைக்குப் பின்னர் மருத்துவ நிபுணர்கள் சார்பில் மருத்துவர் பிரதீபா செய்தியாளர்களை சந்தித்தார்.



"தமிழகத்தில் அரசு என்ன நடவடிக்கை எடுத்தாலும் கொரோனாவின் தாக்கம் அதிகரித்து வருகிறது. தமிழகத்தில் கொரோனா தடுப்பு நடவடிக்கையில் அரசு எடுக்கும் நடவடிக்கை சிறப்பாக உள்ளது.

தமிழகத்தில் மேலும் 2 வாரங்களுக்கு ஊரடங்கை நீட்டிக்க வேண்டும் என முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியிடம் பரிந்துரைக்கப்பட்டுள்ளது" என்று அவர் தெரிவித்தார்.

ஊரடங்கு நீட்டிப்பது குறித்து நாளை மாலை முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அமைச்சரவை கூட்டம் நடைபெற உள்ளது. .

# மாஸ்க் இல்லையெனில் பெற்றோலும் கிடையாது

கொரோனா வைரசை கட்டுப்படுத்துவதன் ஒரு பகுதியாக, மாஸ்க் அணியாத வாடிக்கையாளர்களுக்கு இனி பெட்ரோல் கிடையாது என புவனேஷ்வர் பெட்ரோலிய நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவில் கொரோனா தொற்று அறிகுறியுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களுக்கு அடுத்தடுத்து நோய்த்தொற்று உறுதி செய்யப்படுவதால் கடந்த சில நாட்களாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்த நிலையில், கொரோனா வைரசை கட்டுப்படுத்துவதன் ஒரு பகுதியாக, மாஸ்க் அணியாத வாடிக்கையாளர்களுக்கு இனி பெட்ரோல் கிடையாது என புவனேஷ்வர் பெட்ரோலிய நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக, அந்த நிறுவனங்களின் உரிமையாளர்கள் கூறுகையில், கொரோனா வைரசை கட்டுப்படுத்தும் வகையில் பெட்ரோல் நிரப்பு நிலையங்களுக்கு வரும் வாடிக்கையாளர்கள் இனி கட்டாயம் மாஸ்க் அணிந்து வரவேண்டும். அப்படி மாஸ்க் அணிந்து வராதவர்களுக்கு பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு ஆகியவை வழங்கப்படாது.

எங்கள் பணியாளர்கள்தான் உண்மையான ஹீரோக்கள். அவர்களை காக்கவும், வாடிக்கையாளர்களின் நலனுக்காகவும் இந்த முடிவை எடுத்துள்ளோம் என தெரிவித்துள்ளனர்.

# ஊரடங்கு நேரத்தில் ரிவி பார்த்தே பொழுதை கழிக்கும் இந்தியர்கள்!

## ஆய்வில் தெரிவிப்பு

இந்தியா முழுவதும் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ள நிலையில் தமது பொழுதைப் போக்க மக்கள் தொலைக்காட்சி பார்ப்பதிலேயே அதிக நேரத்தைச் செலவிடுகிறார்கள் என்று ஆய்வு முடிவு தெரிவிக்கின்றது.

கொரோனா வைரஸ் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக ஏப்ரல் 14ஆம் திகதி வரை 21 நாட்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வராமல் முடங்கிக் கிடக்கின்றனர்.

வீட்டில் பிடித்தமான வேலைகளை செய்வது, குழந்தைகளுடன் விளையாடுவது, மறந்து போன பாரம்பரிய விளையாட்டுகளில் ஈடுபடுவது எனப் பலரும் பொழுதை கழித்தாலும் பெரும்பாலானவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதிலேயே தமது நேரத்தைச் செலவிடுகிறார்கள் என்கிறது இந்த ஆய்வு. தொலைக்காட்சிக்கு அடுத்த நிலையில் திறன்பேசிகள் (ஸ்மார்ட் போன்) பெரும்பாலான நேரத்தைப் பிடித்துக்கொள்வதாகவும் ஆய்வு முடிவு தெரிவிக்கின்றது.

இது தொடர்பாக ஒளிபரப்பு பார்வையாளர் ஆய்வு சபை (பார்க்) மற்றும் நீல்சன் நிறுவனம் ஒரு ஆய்வை நடத்தின.

கடந்த வாரம் இந்தியர்கள் 1.27 டிரில்லியன் நிமிடங்கள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்த்துள்ளனர். இதுவே இந்தியர்கள் ஒரு வாரத்தில் தொலைக்காட்சி பார்த்த அதிக நேரம் ஆகும்.

கொரோனா வைரசுக்கு முந்தைய காலத்துடன் (ஜனவரி 11 -31) ஒப்பிடும் போது, தொலைக்காட்சி பார்ப்பது கடந்த வாரத்தில் 43 சதவீதம் உயர்ந்துள்ளது.

சராசரி தினசரி பார்வையாளர்கள் மேலும் 12% அதிகரித்து, 56 கோடியில் இருந்து 62.7 கோடியாக உயர்ந்துள்ளது. கொரோனாவுக்கு முந்தைய காலத்தில் ஒரு பார்வையாளர் தினமும் சராசரியாக 3 மணி 46 நிமிடங்கள் தொலைக்காட்சி பார்த்துள்ளார். அது தற்போது 4 மணி 48 நிமிடங்களாக அதிகரித்துள்ளது.

பார்வையாளர்கள் மணிக்கணக்கில் தொலைக்காட்சி பார்ப்பது மட்டுமல்லாமல், அதிகமான அலைவரிசைகளை மாற்றி மாற்றி பார்க்கிறார்கள். சராசரியாக ஒருவர் 23 அலைவரிசைகளைப் பார்ப்பதாக புள்ளிவிவரம் கூறுகிறது.

இரவு 7 மணி முதல் 11 மணி வரையிலான முக்கிய நேரத்தில் பார்வையாளர்கள் 11 சதவீதமும், மற்றைய நேரத்தில் பார்வையாளர்கள் 81 சதவீதமும் அதிகரித்துள்ளனர். பார்வையாளர்கள் பலர் நள்ளிரவுக்கு பிறகும் (அதிகாலை 1 - 2 மணி வரை) தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதிகாலையிலேயே மீண்டும் (அதிகாலை 4 -6 மணி வரை) பார்க்க தொடங்குகிறார்கள்.

தொலைக்காட்சி செய்திகள் மற்றும் திரைப்படங்கள் பார்ப்பது எல்லா நேரத்திலும் அதிகமாக இருந்தாலும், கடந்த வாரம் திரைப்படம் பார்த்த பார்வையாளர்களின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளதாக புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கேரளாவின் பூரம் திருவிழா கொரோனாவால் நிறுத்தம்

கொரோனா பாதிப்பால் கேரள மாநிலம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருப்பதால் திருச்சூர் பூரம் திருவிழாவை ரத்து செய்ய கோவில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

கேரளாவில் உள்ள திருச்சூரில் ஆண்டுதோறும் பூரம் திருவிழா நடைபெறும். இங்குள்ள ஆராட்டுபுழா கோவிலில் நடைபெறும் இத்திருவிழா உலக பிரசித்தி பெற்றது.

இந்தத் திருவிழாவில் பல யானைகள் அணிவகுப்பு நடைபெறும். இதனைக் காணப் பல வேறு நாடுகளில் இருந்தும் மக்கள் வருவார்கள். வருகிற மே மாதம் 3ஆம் திகதி திருவிழா நடைபெறுவதாக இருந்தது.

கொரோனா பாதிப்பால் மாநிலம் முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருப்பதால் திருவிழாவை ரத்து செய்ய கோவில் நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக கோவில் நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், திருச்சூர் பூரம் திருவிழா ரத்து செய்யப்படுகிறது. அன்று கோவிலில் சாதாரண பூஜைகள் மட்டுமே நடைபெறும். யானைகள் அணிவகுப்பும் நடைபெறாது என்று கூறியுள்ளது.

திருச்சூர் பூரம் விழா 1962ஆம் ஆண்டு இந்தியா - சீனா இடையிலான போர் நடந்த போது ரத்து செய்யப்பட்டது.

அதற்கு பின்பு சுமார் 58 ஆண்டுகளுக்கு பிறகு இப்போது மீண்டும் ரத்து செய்யப்பட்டிருக்கின்றது.

# இந்து முதியவரின் இறுதிச் சடங்கை நடத்தி முடித்தனர் இஸ்லாமியர்கள்

## மும்பையில் கரைபுரண்ட மனித நேயம்

ஊரடங்கால் குடும்பத்தினர் வரமுடியாத நிலையில் இந்து முதியவரின் உடலை இஸ்லாமியர்கள் தூக்கிச் சென்று தகனம் செய்த நெகிழ்ச்சியான சம்பவம் இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் நடந்துள்ளது.

மும்பையின் பாந்திரா கரீம்நகரை சேர்ந்தவர் முதியவரான பிரேம் சந்திரா (வயது 68) உடல் நலக் குறைவால் உயிரிழந்தார். இவரது சொந்த ஊர் ராஜஸ்தான் மாநிலம். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த பிரேம் சந்திரா மகன் மோகன் மட்டுமே மும்பையில் அவருடன் தங்கியிருந்தார்.

ஊரடங்கு காரணமாக ராஜஸ்தானில் உள்ள குடும்பத்தினர் மற்றும் நண்பர்களால் பிரேம் சந்திராவின் இறுதிச் சடங்கிற்கு வரமுடியவில்லை.

இதையடுத்து பிரேம் சந்திரா உடலுக்கு அவரது பக்கத்து வீடுகளில் வசிக்கும் இஸ்லாமியர்கள் இந்து முறைப்படி இறுதி சடங்கு செய்தனர். பின்னர் உடலை தோளில் சுமந்து சென்று தகனம் செய்தனர்.

நாலாசோப்ராவில் வசிக்கும் எனது 2 அண்ணன்களை தொடர்பு கொள்ளக்கூட முடியவில்லை. ராஜஸ்தானில் உள்ள எனது சித்தப்பாக்களுக்கு தகவல் கொடுத்தேன். அவர்களால் வரமுடியவில்லை. இந்த நிலையில் பக்கத்து வீடுகளைச் சேர்ந்த இஸ்லாமியர்கள் எனது தந்தையின் இறுதி சடங்குக்கு உதவி செய்ய முன்வந்தனர். இறப்பு சான்றிதழ் வாங்கவும், தகனமையத்துக்கு உடலை தூக்கி வந்தும் அவர்கள் உதவினார்கள். இதுபோன்ற சூழ்நிலையில் உதவி செய்தற்காக அவர்களுக்கு நன்றி கூறிகொள்கிறேன் என்றார் மோகன்.

பிரேம் சந்திராவை எனக்கு நன்றாகத் தெரியும். இதுபோன்ற நேரங்களில், மதங்களைத் தாண்டி மனிதநேயத்தை வெளிப்படுத்தவேண்டும் என்றார் இறுதிச் சடங்கில் கலந்துகொண்ட யூசுப் சேக்.



# தேர்தல் சட்டங்களை மீறி அரசுத் தரப்பின் அறிவிப்புகள்

**அரசாங்கத் தலைவர்கள் நாட்டு மக்களுக்கு ஆற்றும் உரைகளும் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்புக்களும் எதிர்க்கட்சிகளை அரசியல் ரீதியாக தூற்றுவதையே இலக்காகக் கொண்டுள்ளனவாம்**

## தேர்தல் ஆணையகத்திடம் ஐ.தே.கட்சி எழுத்து மூலம் முறையீடு

கொரோனா வைரஸால் நாடு மோசமான நெருக்கடிக்குள் முகம்கொடுத்துள்ள தற்போதைய சூழலில் தேர்தல் சட்டங்களை மீறி அரசாங்கத்தின் தலைவர்கள் நாட்டு மக்களுக்கு ஆற்றும் உரைகள் மற்றும் அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்புக்கள் எதிர்க்கட்சிகளை அரசியல் ரீதியாக தூற்றுவதையே இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றன என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு ஐக்கிய தேசிய கட்சி தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துக் கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:

கொரோனா வைரஸ் பரவலினால் நாடு மோசமான பாதிப்புக்களுக்கு முகம்கொடுத்துள்ள சந்தர்ப்பத்தில் அரசியல் கட்சி பேதமின்றி நாட்டு மக்களின் நலன் கருதி அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் மக்களுக்கு நிவாரணம் வழங்கும் செயற்பாடுகளை அரசியல்மயப்படுத்தி அதில் அரசியல் லாபம் தேடும் நோக்கில் ஆளும் பொதுஜன பெரமுனவினர் செயற்படுகின்றமை கவலையளிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட போது நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடியான நிலைமை காரணமாக எதிர் கட்சிகள் மக்கள் மத்தியில்அரசியல்கருத்துக்களையோ, வாதங்களையோ முன்வைக்காது நாட்டு மக்களின் நலன்களுக்கான நடவடிக்கைகளிலேயே அர்ப்பணிப்புடன் செயற்பட்டன.

இவ்வாறான சூழலில் அரசாங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த சிலர் மீண்டும் மீண்டும் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக கொரோனா வைரஸ் பரவலைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டச் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறி நாட்டு மக்களுக்கு ஆற்றப்படும் உரை மற்றும் அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்புக்களில் எதிர்க்கட்சிகளை அரசியல் ரீதியாக தூற்றும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாராந்தம் வியாழக்கிழமைகளில் நடைபெறும் அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்கு நடத்தப்படும் ஊடகவியலாளர் மாநாடு இதற்கு சிறந்த உதாரணம் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

அரச தொலைகாட்சி சேவைகளும் மற்றும் வேறு சில தனியார் தொலைக்காட்சிகளும் கூடுதலான நேரத்தை ஒதுக்கி அதனை நேரடி ஒளிபரப்பு செய்து வருகின்றன எனவும் ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்று வரும் இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சர்களான பந்துல குணவர்தன, ரமேஷ் பத்திரண மற்றும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நாலக கலுவேவா ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

இதன் போது அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்த கருத்துக்கள் முழுமையாக அரசியல் ரீதியாகவே காணப்பட்டன என்றும், அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிப்பதாகக் கூறிய அவர்கள் தொடர்ச்சியாக ஐக்கிய தேசிய கட்சியை விமர்சித்துக் கொண்டிருந்ததோடு, தமது அரசாங்கத்தின் பெருமைகளை கூறுவதற்கே முயற்சித்துக் கொண்டிருந்தனர் என்றும் சட்டச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சி மீது அடிப்படையற்ற விதத்தில் முன்வைக்கப்படும் இவ்வாறான விமர்சனங்களுக்கும், குற்றச்சாட்டுகளுக்கும் பதிலளிக்க வேண்டியுள்ளமையுடன், இவ்வாறானதொரு நெருக்கடியான சூழல் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் குறுகிய அரசியல் நோக்கத்திற்காக ஊடகங்களை பயன்படுத்திக் கொள்வது அருவருக்கத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை ஆளும் கட்சியினரின் இந்த நடவடிக்கைகள் அப்பட்டமாக தேர்தல் சட்டத்தை மீறும் செயற்பாடுகள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் இணைந்து கொண்டிருந்த இணை அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண ஊடகங்களைப் பயன்படுத்திக் கொண்ட விதத்தில் எவ்வித பிரச்சினையும் இல்லை என்றும் கூறியுள்ளார்.

சிறந்த அரசியல்வாதி என்ற ரீதியில் அவர் அமைச்சரவை முடிவுகளை மாத்திரம் அறிவித்து தொடர்ந்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்புக்களில் தனது தராதரத்தினை பாதுகாக்கும் வகையில் மதிப்புடன் செயற்பட்டார் எனவும் பாராட்டிய ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டச் செயலாளர், எனினும் பந்துல குணவர்தன தனது குறுகிய அரசியல் நோக்கத்திற்காக ஊடக சந்திப்பை தவறாகப் பயன்படுத்திக் கொண்டார் எனவும் குற்றம்சாட்டியுள்ளார்.

இவ்வாறான சட்ட விரோதமாக அரசியலில் ஈடுபடுகின்ற நடவடிக்கைகள் மீண்டும் மீண்டும் இடம் பெறாமல் இருப்பதற்காக தேர்தல் சட்டத்துக்கு அமைய செயற்படுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வலியுறுத்தியுள்ள ஐக்கிய தேசி யக் கட்சி, தேர்தல்கள் ஆணைக்குழுவும் இதனை உறுதிப் படுத்தவேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளது.

காலைக்கதிர் Kalaikathir



# முடக்கப்பட்ட தாராபுரத்தில் மொத்தம் 464 குடும்பங்கள்





மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள தாராபுரம் கிராமம் கடந்த புதன் கிழமை அதிகாலை முதல் எதிர் வரும் ஒரு வாரத்திற்கு முழுமையாக முடக்கப்பட்டுள்ள நிலையில் இந்தக் கிராமத்தில் தனிமைப்படுத்தப்பட்ட இரண்டு குடும்பங்கள் இன்று நேற்று வெள்ளிக்கிழமை காலை கொரோனா சமுதாய பரிசோதனைக்கு உற்படுத்தப்பட்டுள்ளனர்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் நேற்றுய் வெள்ளிக்கிழமை காலை இந்தக் கிராமத்தில் உள்ள இரு விடுகளுக்கும் சென்று தனிமைப்படுத்தப்பட்ட இரு வீடுகளிலும் உள்ள 08 உறுப்பினர்களுக்கு கொரோனா சமுதாய பரிசோதனைகளை மேற்கொண்டார்.

மேலும் பொது சுகாதார பரிசோதகர்களும், சுகாதாரத் துறைப் பணியாளர்களும் அந்த வீடுகளுக்கு சென்றமையோடு, அங்கு கிருமி நீக்கும் நடவடிக்கைகளையும் முன்னெடுத்தனர்.

மேலும் தாராபுரம் கிராமத்தை சுற்றி இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தாராபுரம் கிராமத்தில் உள்ள இரண்டு கிராம அலுவலகர் பிரிவுகளை சேர்ந்த 464 குடும்பங்கள் இவ்வாறு முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 20 ஆயிரம் சோதனை உபகரணங்கள் சீனாவிலிருந்து நேற்றிரவு வரவிருந்தன

### அடுத்த வாரம் மேலும் 20 அயிரம் வரும்



கொரோனா தொற்றை கண்டறிவதற்கான பரிசோதனை உபகரணங்கள் ('கிற்றுகள்')அடங்கிய விசேட விமானம் ஒன்று சீனாவிலிருந்து நேற்றிரவு இலங்கை வருகை தரவிருந்தது.

இதனடிப்படையில் 20 ஆயிரத்து 64 உபகரணங்கள் குறித்த விமானத்தில் இலங்கைக்கு கொண்டு வரப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எம்.யு.231 என்ற விமானத்தில் சீனாவின் ஙகாயில் இருந்து இந்தவ உபகரணங்கள் இலங்கைக்கு வருகின்றனஎன இலங்கைக்கான சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

பீ.சீ.ஆர் எனப்படும் கொரோனா வைரஸ் தொற்றை உறுதிப்படுத்த கூடிய இந்த உபகரணங்கள் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியுடையவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவின் முக்கிய செல்வந்தர்களில் ஒருவரான வர்த்தகர் ஜேக் - மா ஊடாக இந்த பரிசோதனை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் அடுத்த வாரம் மேலும் 20 ஆயிரம் பரிசோதனை உபகரணங்களை நாட்டிற்குக் கொண்டு வருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சீன தூதரகம் அறிவித்துள்ளது.

இதேவேளைகொவிட்-19தொற்றை கட்டுத்தும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா இலங்கைக்கு 13 லட்சம் அமெரிக்க டொலர் நிதி வழங்கியுள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் ஊடாக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

பங்காளர்கள் மற்றும் நண்பர்கள் என்ற அடிப்படையில் கடினமான நேரங்களில் அமெரிக்கர்களும் இலங்கையர்களும் ஒருவருக்கு ஒருவர் உதவுகின்றனர் என இலங் கைகான அமெரிக்க தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கொவிட் - 19 தொற்றுக்கான சோதனைகள் நிமித்தம் இலங்கையில் ஆய்வுக் கூட முறைமைகளை தயார்படுத்த அமெரிக்கா உதவும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹெரோயினுடன் சிக்கிய பிரதேச சபை உறுப்பினர்



பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் ஹெரோயின் போதைப் பொருளுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்னேவ பிரதேச சபையின் உறுப்பினரே 6 கிராம் 10 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் தம்புத்தேகம பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கலாஓய பாலத்திற்கருகே கைது செய்யப்பட்ட இவரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இலங்கையில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக ஊரடங்கு சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் இவ்வாறான சட்டவிரோத சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction,
Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# புத்தளத்தில் கெரோனா தொற்றாளர்கள் தலைமறைவாகினரா?

## இல்லை என்கின்றது தாராபுரம் அல் - காசிமி ஜும்ஆ மஸ்ஜித்

புத்தளம்,ஏப்.11

புத்தளத்தில் கெரோனா தொற்றாளர்கள் பலர் தலைமறைவாகினர் என வெளியான செய்தி தவறானது என சம்பந்தப்பட்ட தரப்புகளினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தாராபுரம் அல் – காசிமி ஜும்ஆ மஸ்ஜித் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:–

கடந்த ஏப்ரல் 7 ஆம் திகதி புத்தளம் அல் காசிமி சிட்டி பகுதியில் வசித்து வந்த ஒருவர் ஙீலிஸஷ்– 19 தொற்றுக்கு உள்ளாகியிருக்கின்றார் என இனங்காணப்பட்டார். இது தொடர்பாக பல இணையத்தளங்கள், ஏனைய ஊடகங்களில் முன்னெடுக்கப்படும் போலிப் பிரச்சாரங்களுக்கெதிராக உண்மைத் தன்மையை தெளிவுபடுத்தும் வகையில் இந்த ஊடக அறிக்கையை வழங்குகின்றோம்.

சம்பந்தப்பட்ட நபர் மார்ச் 16 ஆம் திகதி அதிகாலை இந்தோனேசியாவிலிருந்து அல் காசிமி சிட்டியை வந்தடைந்தார். அதன் பின்னர் மார்ச் 18 ஆம் திகதி காலையில் வான் ஒன்றின் மூலம் மன்னார் தாராபுரத்திற்கு அவரின் மைத்துனரின் இறுதிச் சடங்குக்காக தனது குடும்ப உறுப்பினர்கள் சகிதம் சென்றார். அதே வேளை அந்த இறுதிச் சடங்குக்காக அல் காசிமி சிட்டி பகுதியிலிருந்து சுமார் 50 பேர்களுடன் பகல் 12 மணியளவில் பஸ் ஒன்று புறப்பட்டுச் சென்று நள்ளிரவில் மீண்டும் புத்தளம் திரும்பியது.

பல்வேறு ஊடகங்களில் ஙீலிஸஷ்– 19 தொற்றுக்குள்ளான நபர் இந்த பஸ்ஸிக் மன்னார் சென்றார் எனவும், இந்த பஸ்ஸில் சென்றவர்கள் தலைமறைவாகியுள்ளனர் எனவும் அவர்களைத் தேடும் பணிகளை சுகாதார உத்தியோகத்தர் மற்றும் பாதுகாப்புத்தரப்பினர் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் போலிப் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காக பஸ்ஸில் சென்றவர்களின் பெயர் விவரங்கள் சுகாதார உத்தியத்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க எமது அல் காசிமி சிட்டி பள்ளி பரிபாலன சபையினால் வீட்டு இலக்கங்களுடன் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட நபர்களை இனங்காட்ட சகல உதவிகளையும் வழங்குவதாகவும் உறுதியளிக்கப்பட்டது.

மேலும் பஸ்ஸில் மரண வீட்டிற்கு சென்றவர்கள் இன்று வரை தங்களது வீடுகளில் இருக்கின்ற போதும் உண்மைத் தன்மைக்கு புறம்பான தகவல்களை தமிழ் மற்றும் சகோதர மொழி ஊடகங்கள் பரப்புகின்றமை எமது ஊருக்கு அவப்பெயரை ஏற்படுத்துவதாக அமைவதுடன் தவறான விம்பத்தை ஏனைய மக்களுக்கும் காட்டுவதாகவும் அமைகின்றது. – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கசிப்புக் காய்ச்சும் முயற்சி இளைஞர்களால் முறியடிப்பு

## வவுனியா தட்டாங்குளத்தில் சம்பவம்

வவுனியா –பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தட்டாங்குளம் காட்டுப் பகுதியில், நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட கசிப்பு உற்பத்தி நடவடிக்கை, வாரிக்குட்டியூர் இளைஞர்களால் முறியடிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதை அறிந்த வாரிக்குட்டியூர் பகுதி இளைஞர்கள் பூவரசங்குளம் பொலிஸாருக்கு தகவல் தெரிவித்தமையுடன், அப்பகுதிக்குச் சென்று முற்றுகையிட்டனர்.

இதன்போது கசிப்பு காய்ச்சும் செயற்பாட்டை முன்னெடுத்த நபர்கள் தப்பி ஓடினர்.

இந்நிலையில், கசிப்பு காய்ச்சுவதற்காக வைக்கப்பட்டிருந்த பொருள்கள் மற்றும் பரல்கள் என்பவற்றை வாரிக்குட்டியூர் பகுதி இளைஞர்கள் மீட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

வவுனியாவில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் அனைத்து மதுபான நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

இந்நிலையில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் கிராமங்களில் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தொற்றாளர்களின் சிகிச்சைக்கு மற்றொரு ரோபோ

## ரஜரட்ட பல்கலை மாணவர்கள் தயாரிப்பு

கொரோனா தொற்றாளர்களுக்கு மிகவும் பாதுகாப்பான - விரைவான - சிகிச்சையை அளிப்பதற்காக ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப பீட மாணவர்களால் தயாரிக்கப்பட்ட ரோபோ இயந்திரம் , நேற்று அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வைத்திய மத்திய நிலையத்துக்குக் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த ரோபோவைத் தூர இடத்திலிருந்து முற்றாக செயற்படுத்த முடியும் என்பதுடன் அது நோயாளிக்கு அருகில் சென்று மருந்துகளை வழங்குதல், நோயாளியுடன் கலந்துரையாடல் செய்தல் உள்ளிட்ட வசதிகளுடன் தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இதன் மூலம் 25 கிலோகிராம் நிறையுடைய மருந்துகளை கொண்டு செல்லவும் முடியம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# கண்ணுக்குத் தெரியாத எதிரியுடன் போரிட வேண்டிய காலகட்டம் இது!

## கிழக்கு சுகாதார பணிப்பாளர் தெரிவிப்பு

கண்ணுக்குத் தெரியாத எதிரியுடன் போரிட வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம் என கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்தியர் ஏ.லதாகரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் தற்போது கொரோனாவைரஸ்தொற்றுநிலைமை தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை மாலைசெய்தியாளர்சந்திப்பில்கலந்து கொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கருத்துக் கூறுகையில் –

உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்றானது மிகவும் தீவிரமாக பல நாடுகளில் பரவி வருகின்ற இந்தக் காலகட்டத்தில் எமது கிழக்கு மாகாணத்தில் இந்த வைரஸின் ஆதிக்கம் சற்றுக் காணப்படுகின்றது.

இதுவரைகாலமும் கிழக்கு மாகாணத்தில் இரண்டு நபர்கள் கொரோனா தொற்று அறிகுறிகளுடன் இருக்கின்றனர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். முதலாவது நபர் வெளிநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து தங்கியிருந்தவர். பரிசோதனையின் பின்னர் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் அவருடன் தொடர்புடைய அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

அதன் பின்னர் அவர்களுக்கு பரிசோதனை மேற்கொண்ட பொழுது தனிமைப்படுத்தப்பட்ட நபர்கள் எவருக்கும்கொரோனாத்தொற்றுஇல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

கல்முனை சுகாதார சேவைகள் பணிமனையின் இயங்கும் அக்கரைப்பற்று பிரதேசத்தைச் சேர்ந்த நபர் மார்ச் 15ஆம் தேதி கட்டார் நாட்டில் இருந்து திரும்பிய வேளை அவருக்கு எந்தவித அறிகுறியுடன் தென்படாத நிலையில் அவருடன் பயணித்த ஒரு பயணிக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் எங்களுக்குக் கொழும்பில் இருந்து கிடைக்கப்பெற்ற அறிவுரையின் பிரகாரம் அந்த நபருடன் பிரயாணம் செய்த 7 பேரும் கொரோனாத் தொற்று சம்பந்தமான சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர். இதன்போது அக்கரைப்பற்றில் உள்ள நபருக்குத் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதன்பின்னர் சுகாதார அமைச்சு மற்றும் கிழக்கு

மாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைய வெலிக்கந்தை ஆதார வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காகவும் கண்காணிப்புக்காகவும் அவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.




குறித்த நபருடன் மிகவும் நெருங்கிய தொடர்புடைய பத்துப் பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர்.அவர்கள் தொடர்பான பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன. இதன் முடிவு பின்னரே அவர்கள் குறித்த விளக்கத்தை அளிக்க முடியும். இதுவரை எங்களுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த நபருடன் 10 பேர் மாத்திரம் நெருங்கிய தொடர்பைப் பேணி உள்ளனர் என்பதும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

இது சம்பந்தமாக பல வதந்திகள் வந்த வண்ணம் உள்ளது இதன் உண்மைத்தன்மை அறிய வேண்டுமெனில் எமது கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் அனுப்புமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

மத்திய அரசிலிருந்து எமக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் மாவட்டம் தோறும் குறைந்தது 2 வைத்தியசாலைகள் ஏற்படுத்த அனைத்து ஏற்பாடுகளையும் நாங்கள் செய்து வருகின்றோம். இதனிடையே மத்திய அரசிடம் இருந்து வந்த கட்டளையின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையை கிழக்கு மாகாணத்தில் கொரோணா தொற்று உள்ளவர்கள் எனச் சந்தேகிக்கும் நபர்களை தடுத்து வைத்து பரிசோதனை மையமாக மாற்றுவது குறித்து

மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலை அத்தியட்சகருடன் தயார்படுத்தலில் ஈடுபட்டு வருகின்றோம்.

இந்தக் கொரோனா தொற்றானது பாரியளவில் பரவ தொடங்குமாயின் அனைத்து ஆதார வைத்தியசாலையும் பயன்படுத்துவதற்கான தயார்படுத்தலும் நடைபெற்று வருகின்றது.

அதேநேரம் அக்கரைப்பற்றில் கொரோனா தொற்றுக்கு ஆளான நபருக்கு தற்போது தொற்று இல்லை என பல கருத்துக்கள் பரவிவருகின்றன. பரிசோதனைகளில் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே இவ்வாறான தகவல்கள் எம்மால் வெளியிடப்பட்டன.

வதந்திகளை மக்கள் நம்ப வேண்டாம்.

சுகாதார துறையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்றவகையில்! மக்களுக்குக்கூறுவதுஎன்னவென்றால்புத்தாண்டு என்பது வருடாவருடம் வருவது. இவ்வாறான தொற்றுநோய்கள் நூறு வருடங்களுக்கு ஒருமுறை வரும் கொள்ளை நோய். ஆகவே எங்களை நாங்கள் பாதுகாக்க வேண்டும். இதுவரை எந்தவொரு நாடுமே ஒருநாள் தொடரில் பூரண அறிகுறிகளைக் கண்டுபிடிக்கவில்லை. தற்போது நாம் கண்ணுக்குத் தெரியாத எதிரியுடன் போரிட வேண்டியுள்ளது.

புத்தாண்டு காலத்தில் உங்களையும் உங்களை உண்மையாக நேசிக்கும் நபர்களையும் பாதுகாக்க வேண்டுமென்றால் சுகாதார திணைக்களத்தினால் அறிவுறுத்தப்பட்டுள்ள சமூக இடைவெளி, தனிநபர் இடைவெளி சுகாதாரம் – இவ்வாறான வழிமுறைகளை பின்பற்றுவதன் மூலம் உண்மையில் உங்களையும் உங்களைச் சூழ உள்ளவர்களையும் பாதுகாக்கவும் முடியும்.

தங்களைத் தனிமைப்படுத்தி சுகாதாரத்துறை வழங்கும் அறிவுரைகளை இயன்றளவு பின்பற்றி மக்கள் ஒன்று கூடுவதை தவிர்த்து இந்த தொற்று நோயிலிருந்து நம்மை பாதுகாப்பது மக்களாகிய உங்களின் கைகளில் இருக்கின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். – என்றார்.




காலைக்கதிர் Kalaikathir

தெரு விளக்கு

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கானது



தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

இன்று (11/04/2020) தலைப்பு
தெரு விளக்கு

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# தினம் ஒரு தலைப்பு

# சித்திரப்போட்டி

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்





படம் 1



படம் 2

**படம் 1**
வரைந்தவர்
வி. சேஷகி
யா/ மகாஜனா கல்லூரி

**படம் 2**
வரைந்தவர்
ஏ. எஸ் எவ். மனால் – தரம் 9
கல்கமுவ முன்னோடி முஸ்லிம் மகா வித்தியாலயம்

**இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.**
**இன்றையசித்திரப் போட்டிக்கான தலைப்பு – ‘தெரு விளக்கு’**

நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் ‘ஆதி மனிதன்’ எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

வி. சகானா - தரம் 8
யா/ சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

அறிவுச்செல்வன் அறிவுஅரங்கன்
தரம் 8
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

உ. ஆராதனா - தரம் 2
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

உ. ரோஷித - தரம் 4
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

மயூரன் தேனுகா - தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

ஜே. கிதுஷா - தரம் 9
சம்மாநதுறை விபுலானந்தா மகா வித்தியாலயம்

அக்ஷா கீர்ததிராஜ் - தரம் 4
ஹட்டன் ஹைலாண்ட் கல்லூரி

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

பா. பிரியேஷ் - தரம் 1
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்

எஸ். அக்ஷன்யா - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

எஸ். ஹரினி - தரம் 2
யா/ புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

ஜே. வித்தியசாகர் - தரம் 2
புனித பரியோவான் கல்லூரி

தி. கோவெழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

பானா ஹர்ஷன் - தரம் 7
யா/ சுண்டுக்குழி மகளிர் கல்லூரி

செந்தூரன் அபிஷ்கன் - தரம் 4
கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்

எஸ். சிவகலை - தரம்4
யா/ இடைக்குறிச்சி சிறிசுப்பிர மணிய வித்தியாலயம்

ஜே. அபினன் - தரம் 8
ம/ பனிநகர் மகா வித்தியாலயம்

கே. தர்சன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

கே. திகேசன் - தரம் 10
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

த. சம்யுக்தா - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

த. சுதந்திரா - தரம் 6
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி



# தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினருக்கு புலிகளையும் போராட்டத்தையும் விமர்சிப்பதற்கு என்ன அருகதை?



தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணி தலைவர் கேள்வி

தமிழ் மக்களின் நியாயமான போராட்டம் பற்றியும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் பற்றியும் விமர்சிப்பதற்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினருக்கு என்னஅருகதைஉள்ளதுஎன இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் தலைவரும், கோறளைப்பற்று பிரதேச சபையின் உறுப்பினருமான கி.சேயோன் கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் 2004 ஆம் ஆண்டு வெருகல் போரில் பெண் போராளிகள் விடயத்தில் ஒழுக்க ரீதியான தவறை இழைத்திருந்தனர் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணித் தலைவி செல்வி மனோகர் இன்று (வெள்ளியன்று) கருத்தைப் பதிவிட்டிருந்தார்.

இது தொடர்பில் தனது கண்டனத்தை வெளியிட்ட வாலிபர் முன்னணியின் தலைவர் கி.சேயோன் பின்வருமாறு தெரிவித்திருக்கின்றார்:-

தமிழர்களுடைய விடுதலைப் போராட்டம் உரிமைப் போராட்டமாக உலகத் தமிழ் இனத்தின் அங்கீகாரத்துடன் இறுதிவரை நடைபெற்றது. சுதந்திரத்திற்குப் பின் இலங்கையை ஆண்ட எந்த அரசாங்கமும் தமிழ் மக்களை கௌரவமாக எந்தக் காலகட்டத்திலும் நடாத்தியதில்லை. இதன் காரணமாகவே தமிழர்கள் தமது சுய நிர்ணய உரிமைக்காகப் போராட ஆரம்பித்து அது ஆயுதப் போராட்டமாக பரிணமித்தது.

இந்நிலையில் 32க்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகள் போராட புறப்பட்டு தத்தம் சுயநலத்திற்காகப் பல பிரிவுகளாகப் பிரிந்து இறுதியில் எம்மை வந்தித்த அரசுகளோடு இணைந்து எம்மை அழித்ததே வரலாறு. இறுதிவரை தமிழ் மக்களின் விடுதலைக்காக, கொள்கைக்காக, கண்ணியமான முறையில் போராடியது தமிழீழ விடுதலைப் புலிகள் மாத்திரமே. இதை நான் சொல்லவில்லை.இராணுவ ஆய்வாளர்களே கூறுகிறார்கள்.

ஏன், இறுதி யுத்தத்தில் பங்கு கொண்ட இராணுவத் தளபதிகள் கூட ஒழுக்கம் சார்ந்து குற்றம் சாட்டப்படாத அமைப்பாகவே இன்னும் புலிகளைப் பார்க்கிறார்கள்.

இன்றைய பாதுகாப்புச் செயலாளரும், முன்னாள் இராணுவத்தின் முக்கிய தளபதியாகவும் இருந்த கமல் குணரட்ன எழுதிய நந்தி கடலுக்குச் செல்லும் பாதை எனும் நூலில் எங்களுக்கு எதிராக ஆயுதம் தூக்கி போராடினாலும் ஒழுக்க ரீதியான கட்டமைப்புகளை கொண்டிருந்தார்கள் என்று சொல்லத் தயங்கவில்லை.

விடுதலைப. புலிகளிடம் இருந்து பல வீடியோக்கள், புகைப்படங்கள் கைப்பற்றப்பட்டன. அதில் எதிலும் அவ்வமைப்பின் தலைவரோ, போராளிகளோ மதுக்கிண்ணங்களுடனோ அல்லது களியாட்ட நிகழ்வுகளிலோ இருந்தமையைக் காணவில்லை எனக் கூறுகின்றார். எதிரி கூட இவ்வமைப்பின் ஒழுக்கத்தினை பாராட்டி பெருமிதம் கொள்ளும் வேளையில் வரலாறு தெரியாமல் பிதற்றிவருகிறார் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளிர் அணித் தலைவி.

தமிழ் மக்களின் போராட்டம் பற்றியும், தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் பற்றியும் இருக்கும் புதிருக்கான விடைகளை அவர்களின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரிடம் தெளிவடைந்து கொள்ள முடியும்.

தமிழருக்கே இருக்கின்ற ஒழுக்க குணத்தையும், பண்பாட்டு ரீதியான கோட்பாடுகளையும் இப்படிப்பட்டவர்களின் சுயநல சிந்தையால் மழுங்கடித்து வருவதனாலேயே தமிழினம் இன்னும் இழிநிலை காண்கிறது. என்பது இப்போதாவது பலருக்கும் புரிந்திருக்கும்.

கிழக்குப் புலிகள் என்று மார்தட்டிய நேரத்தில்தான் கிழக்கில் படுகொலைகள், ஆள்கள் கடத்தல்கள், கப்பம் கோரல்கள் எல்லாம் இடம்பெற்றன. இவற்றுக்கு எல்லாம் அந்தக் காலத்தில் கிழக்கை ஆண்ட நீங்கள் பொறுப்பு ஏற்றுக் கொள்வீர்களா?

ஒட்டுமொத்தத் தமிழினத்தினையுமே இழிநிலைக்கு கொண்டு செல்லும் இவ்வாறானவர்களின் கருத்துக்கள் முள்ளிவாய்க்காலில் கொத்துக்கொத்தாக அழிந்த வேதனையை மறந்து, மன்னித்து, இயல்பு வாழ்வில் கலந்து வாழும் தமிழினத்தைக் கேவலப்படுத்தும் செயலாகவே நான் பார்க்கிறேன். அத்துடன் இதை வன்மையாகவும் கண்டிக்கிறேன். - என்று தெரிவித்தார்.

## உடற்கவச அங்கிகள் அன்பளிப்பு

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு படையினரின் 59ஆவது படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் கொரோனா வைரஸின் தாக்கதில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் நேக்கில், மருத்துவர்களுக்கான உடற்கவச அங்கிகளை படையினர் அன்பளிப்பு செய்துள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள 59ஆவது படைப்பிரிவின் கட்டளைத்தளபதி மேஜர் ஜென ரல் பெரேராவால், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் வழங்கி வைக்கப் பட்டுள்ளது.50 உடற்கவச அங்கிகள் இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

## இராணுவத்தில் மையங்களில் 1311 பேர் தனிமைப்படுத்தலில்

இராணுவத்தினரால் பராமரிக்கப்படும் தனிமைப் படுத்தல் மத்திய நிலையங்களில் மேலும் 1311 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதுவரை தனிமைப்படுத்தல் செயற்பாட்டை நிறைவு செய்த சுமார் 3,459 பேர் தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் இருந்து வெளியேறியுள் ளனர் எனவும் அவர் கூறினார்.

புத்தளம், அல்காசிம் சிட்டி மற்றும் பாலாவி ஆகிய பகுதிகளில் இருந்து சுமார் 65 பேர் புனாணை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு நேற்று முன்தினம் இரவு அனுப்பப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

அவர்களில் அண்மையில் இந்தோனேசியாவிற்கு சென்று வந்து மன்னார் தராபுரம் பகுதியில் மரண வீடு ஒன்றுக்கும் சென்று அதனை மறைத்த வரும் அடங்குகிறார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.


வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாமம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் — இல, 01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி — இல.01 NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.04.2020 இல் வெளியிடப்பெற்றது.